# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6
# மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் –2025
# விடைக் குறிப்புகள்– வரலாறு (தமிழ் வழி)

**மொத்த மதிப்பெண்கள்– 90**

குறிப்பு–

1. நீலம் அல்லது கருப்பு நிற மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. பகுதி 1–ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **20×1=20**

| வகை A | | | வகை B | | | மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஈ | வசுபந்து | 1 | இ | ஔரங்கசீப் | 1 |
| 2 | இ | ஔரங்கசீப் | 2 | அ | கொற்கை | 1 |
| 3 | ஆ | மொராக்கோ | 3 | ஈ | கானிங் | 1 |
| 4 | ஈ | 1863 | 4 | அ | அவந்தி | 1 |
| 5 | அ | கொற்கை | 5 | ஈ | 1863 | 1 |
| 6 | இ | (iv) | 6 | இ | ராபர்ட் கிளைவ் | 1 |
| 7 | ஈ | கானிங் | 7 | இ | 1761 | 1 |
| 8 | ஆ | அரிக்கமேடு | 8 | ஆ | மொராக்கோ | 1 |
| 9 | அ | அவந்தி | 9 | இ | யுவான் சுவாங் | 1 |
| 10 | அ | சிம்மாச்சலம் | 10 | ஆ | கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். | 1 |
| 11 | ஆ | (1)–(iv), (2)-(iii), (3)-(i),(4)-(ii) | 11 | ஈ | வசுபந்து | 1 |
| 12 | ஆ | (i) மற்றும் (ii) | 12 | ஈ | ஜேம்ஸ் பிரின்செப் | 1 |
| 13 | இ | யுவான்சுவாங் | 13 | அ | சிம்மாச்சலம் | 1 |
| 14 | இ | 1761 | 14 | ஈ | தயானந்த சரஸ்வதி | 1 |
| 15 | இ | ராபர்ட் கிளைவ் | 15 | அ | சாரநாத் | 1 |
| 16 | ஈ | தயானந்த சரஸ்வதி | 16 | அ | தூத்துக்குடி | 1 |
| 17 | ஈ | ஜேம்ஸ் பிரின்செப் | 17 | ஆ | (1)–(iv), (2)-(iii), (3)-(i),(4)-(ii) | 1 |
| 18 | அ | தூத்துக்குடி | 18 | ஆ | அரிக்கமேடு | 1 |
| 19 | அ | சாரநாத் | 19 | ஆ | (i) மற்றும் (ii) | 1 |
| 20 | ஆ | கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். | 20 | இ | (iv) | 1 |

<u>பகுதி – II</u>

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×2=14**

**வினா எண் 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 21 | **ஹோமினின்**<br>1. தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றமுடையவர்கள்<br>2. ஆப்பிரிக்காவில் அதிகம் வாழ்ந்தனர்<br>3. அதிரம்பாக்கத்தில் புதை படிவம் கண்டெடுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.<br>4. நர்மதை மனிதன் என அழைக்கப்படுகிறார். **(ஏதேனும் 2 குறிப்புகள்)** | 2 |
| 22 | **தொடக்க வேதகாலத்தில் பெண்களின் நிலை**<br>1. பெண்கள் உயர்ந்த இடத்தை வகித்தனர்<br>2. பெண்கள் கிராம கூட்டங்களிலும் வேள்விகளிலும் பங்கெடுத்தனர்<br>3. பலதாரமணம் வழக்கத்திலிருந்தது, விதவைகள் மறுமணம் இருந்தது.<br>**(ஏதேனும் 2 குறிப்புகள்)** | 2 |
| 23 | **திரிபீடகங்கள்**<br>1. சுத்த பீடகம்<br>2. வினய பீடகம்<br>3. அபிதம்ம பீடகம் | 2 |
| 24 | **போரஸின் அரியணையை திருப்பி தரக் காரணம்**<br>1. அலெக்ஸாண்டர் போரஸ் படைகளை ஹைடாஸ்பஸ் போரில் சந்தித்தார்.<br>2. போரஸின் கண்ணியத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்<br>3. அலெக்ஸாண்டரின் மேலாதிக்கத்தை போரஸ் ஏற்றார்.<br>**(ஏதேனும் 2 குறிப்புகள்)** | 2 |
| 25 | **தக்கோலப்போரின் முக்கியத்துவம்**<br>1. தக்கோலம் என்ற இடத்தில் மூன்றாம் கிருஷ்ணா சோழர் படையை தோற்கடித்தார்<br>2. இராமேஸ்வரத்தில் வெற்றித்தூணை நிறுவினார்.<br>3. தக்காணத்தில் தனது ஆதிக்கத்தை செலுத்தினார்.<br>**(ஏதேனும் 2 குறிப்புகள்)** | 2 |
| 26 | **தராப்ஸ்**<br>1. பாமன்ஷா தன் ஆட்சிப் பகுதியை நான்கு பிரிவுகளாக பிரித்தார்.<br>2. குல்பர்கா , தௌலதாபாத், பீடார், பெரார் .<br>3. ஒவ்வொரு தராப்ஸ் பகுதிக்கும் ஒவ்வொரு ஆளுநர் நியமிக்கப்பட்டனர்.<br>**(ஏதேனும் 2 குறிப்புகள்)** | 2 |
| 27 | முகலாயர் காலத்தில் தமிழ்மொழி மற்றும் இலக்கியத்தின் வளர்ச்சி<br>1. தமிழ் இலக்கிய பரப்பில் சைவ, வைணவ இலக்கியங்கள் பெரும் செல்வாக்கு பெற்று திகழ்ந்தன.<br>2. குமரகுருபரர்– மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நீதி நெறி விளக்கம் ஆகியன இயற்றப்பட்டன<br>3. தாயுமானவர்– சமரச சன்மார்க்கம் என்ற நூலை இயற்றினார்.<br>4. ராபர்ட் டி நொபிலி , வீரமாமுனிவர் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பங்காற்றினர். **(ஏதேனும் 2 குறிப்புகள்)** | 2 |

| | | |
|---|---|---|
| 28 | சரஸ்வதி மஹால் நூலகம்<br>1. தஞ்சாவூரில் நாயக்க மன்னரால் கட்டப்பட்டது.<br>2. இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது.<br>3. இங்கு பல மொழி நூல்கள், ஓலைச்சுவடிகள் , ஆவணங்கள் உள்ளன.<br>4. மாரத்திய அன்றாட அரசவை அலுவல் குறிப்புகள் இங்கு பராமரிக்கப்பட்டது. **(ஏதேனும் 2 குறிப்புகள்)** | 2 |
| 29 | **சுத்தி இயக்கம்**<br>1. சுவாமி தயானந்த சரஸ்வதி சுத்தி இயக்கத்தை தோற்றுவித்தார்.<br>2. இந்து மதத்திலிருந்து மதம் மாறியவர்களை மீண்டும் இந்துக்களாக மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.<br>3. அகமதிய இயக்கத்தின் எதிர்ப்புகளை சந்தித்தது. **(ஏதேனும் 2 குறிப்புகள்)** | 2 |
| 30 | **உத்திரமேரூர் கல்வெட்டு**<br>1. முதலாம் பராந்தக சோழன் காலத்து கல்வெட்டாகும்.<br>2. உள்ளாட்சி நிர்வாகம் பற்றி குறிப்பிடுகிறது.<br>3. உறுப்பினர் தேர்வு முறை பற்றி குறிப்பிடுகிறது.<br>4. குடவோலை முறை பற்றி குறிப்பிடுகிறது. **(ஏதேனும் 2 குறிப்புகள்)** | 2 |

## பகுதி – III

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21**

**வினா எண் 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 31 | அச்சூலியன், சோஹானியக் கருவி தொழில்நுட்பம்<br>அச்சூலியன்<br>1. கைக்கோடாரி வகைக் கருவிகளை கொண்ட மரபு அச்சூலியன் மரபு<br>2. கோடாரிகளையும், வெட்டுக் கத்திகளையும் கொண்டது.<br>**சோஹானியன்**<br>1. கூழாங்கல்லைச் செதுக்கி உருவாக்கப்படும் கருவிகளை கொண்ட மரபு சோகனியன் மரபு<br>2. துண்டாக்கும் கருவிகளையும் அதை சார்ந்த கருவிகளையும் கொண்டது.<br>**(ஏதேனும் மூன்று)** | 3 |
| 32 | **மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகள்–**<br>1. கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில்<br>2. கால்நடைகள் புனிதமாகவும், சொத்தாகவும் கருதப்பட்டது.<br>3. கால்நடைகள் தட்சணையாக வழங்கும் பழக்கம் காணப்பட்டது.<br>4. மேய்ச்சல் தொழில் வேளாண்மையின் துணைத் தொழிலானது.<br>**(ஏதேனும் மூன்று)** | 3 |
| 33 | **காட்டை திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு–**<br>1. ஆரியர்கள் இடம் பெயர்ந்த போது அடர்ந்த காடுகளை சந்தித்தனர்.<br>2. காடுகளை திருத்துவதில் இரும்பு முக்கிய பங்காற்றியது.<br>3. இரும்பின் கொழுமுனைகளின் பயன்பாட்டால் வேளாண் உற்பத்தி மேம்பட்டன.<br>4. இரும்புகோடாரிகள், இரும்பு கலப்பைகள் பெரிதும் பயன்பட்டன.<br>**(ஏதேனும் மூன்று)** | 3 |

| | | |
|---|---|---|
| 34 | தமிழ் நிலத்தின் ஐந்திணைகள்<br>1. குறிஞ்சி– மலையும் மலை சார்ந்த இடமும்<br>2. முல்லை– காடும் காடு சார்ந்த இடமும்<br>3. மருதம் – வயலும் வயல் சார்ந்த இடமும்<br>4. நெய்தல்– கடலும் கடல் சார்ந்த இடமும்<br>5. பாலை– மணலும் மணல் சார்ந்த இடமும் | 3 |
| 35 | குப்த பேரரசின் நிர்வாகப் பிரிவுகள்<br>1. பேரரசு தேசம் அல்லது புக்தி என்ற மாநிலங்களாக பிரிக்கப்பட்டு உபாரிகா என்ற ஆளுநரால் நிர்வகிக்கப்பட்டன.<br>2. மாநிலங்கள் விஷ்யா என்ற மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு விஷ்யபதி என்ற அதிகாரியின் கீழ் ஆளப்பட்டது.<br>3. மாவட்டத்திற்கு கீழ் விதி, பூமி, பதகா, பீடா என்ற நிர்வாக அலகுகள் இருந்தன.<br>4. கிராமிகா, கிராம், அத்யக்ஷா அதிகாரிகள் இருந்தனர். (ஏதேனும் மூன்று) | 3 |
| 36 | இரஸியா சுல்தானா அதிகாரத்திலிருந்து அகற்றப்பட காரணம்<br>1. டெல்லி சுல்தானியத்தின் முதல் பெண் அரசியாக இரஸியா அரியணையேறியதை பிரபுக்கள் எதிர்த்தனர்.<br>2. குதிரை மீது ஏறி சவாரி செய்வது, முகத்துக்கு திரையிடாமல் இருப்பது போன்றவை பிரபுக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.<br>3. யாகூத் என்ற அடிமையை குதிரைப்படை தலைவனாக்கியது.<br>4. இதனால் பிரபுக்கள் அரியணையிலிருந்து அகற்ற முயன்றனர்.<br>(ஏதேனும் மூன்று) | 3 |
| 37 | ராக்சஷி– தங்கடி போர்<br>1. விஜய நகர அரசுக்கும், பாமினி சுல்தான்களுக்கும் இடையே நடைபெற்றது.<br>2. 1565–இல் நடைபெற்றது.<br>3. தலைக்கோட்டை போர் எனப்பட்டது.<br>4. விஜயநகரம் தோல்வியுற்றது.<br>5. ராமராயர் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார். (ஏதேனும் மூன்று) | 3 |
| 38 | முகலாயர் ஆட்சியில் நிறுவப்பட்ட ஐரோப்பிய வணிக நிறுவனங்கள்/ குடியேற்றங்கள்<br>1.போர்த்துகீசியர் – கோவா, டையூ–டாமன், சால்செட், சாந்தோம்<br>2. டச்சுக்காரர் – மசூலிப்பட்டினம், பழவேற்காடு, சூரத்,<br>3. டேனியர் – தரங்கம்பாடி, செராம்பூர்<br>5. பிரெஞ்சுக்காரர்–சூரத், புதுச்சேரி, மாஹி, ஏனாம், காரைக்கால்<br>6. ஆங்கிலேயர்– சூரத், சென்னை, பம்பாய், கல்கத்தா<br>(ஏதேனும் மூன்று) | 3 |
| 39 | வீரபாண்டிய கட்டபொம்மன்<br>1. 1760 இல் பிறந்தவர்.<br>2. பாஞ்சாலக்குறிச்சியை ஆட்சி செய்தவர்.<br>3. கப்பம் கட்டாததால் கலெக்டர் ஜாக்சனை சந்திக்க வலியுறுத்தப்பட்டார்.<br>4. களப்பூர் காடுகளில் தங்கினார்.<br>5. 1799 இல் கயத்தாறு என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.<br>(ஏதேனும் மூன்று) | 3 |


| | | |
|---|---|---|
| 40 | அயோத்தி தாச பண்டிதர்<br>1. ஒரு சுதேசி மருத்துவர்.<br>2. ஆதி திராவிடர்களிடையே இயக்கத்தை தொடங்கினார்.<br>3. ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்றார்.<br>4. ஒரு பைசாத் தமிழன் என்ற பெயரில் வாராந்திர பத்திரிக்கையை நடத்தினார்.<br>5. சீவகசிந்தாமணி, மணிமேகலை இரண்டும் முழுமையாக அச்சிடப்பட காரணமாக இருந்தார். **(ஏதேனும் மூன்று)** | 3 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7×5=35**

| | | |
|---|---|---|
| 41 (அ) | திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ<br>1. ஹரப்பா<br>2. மொகஞ்சதாரோ **(விளக்கத்துடன்)** | 5 |
| | **(அல்லது)** | |
| 41 (ஆ) | புத்தரின் எண்வழிப்பாதை<br>1. நன்னம்பிக்கை<br>2. நல்லார்வம்<br>3. நல்வாய்மை<br>4. நற்செயல்<br>5. நல்வாழ்க்கை<br>6. நன்முயற்சி<br>7. நற்சிந்தனை<br>8. நல்ல தியானம் | 5 |
| 42 (அ) | மௌரிய பேரரசு பற்றி அறிய உதவும் சான்றுகள்<br>(1) கல்வெட்டுச் சான்றுகள்<br>(2) இலக்கிய சான்றுகள்<br>(3) தொல்லியல் சான்றுகள் **(விளக்கத்துடன்)** | 5 |
| | **(அல்லது)** | |
| 42 (ஆ) | **கலைக்கும் இலக்கியத்திற்கும் கனிஷ்கரின் பங்களிப்பு**<br>**கலை**<br>1. குஷாணர் காலத்தில் நிலவிய பெருமளவிலான படைப்பாற்றலின் காரணமாக கலை, இலக்கியம் செழித்து வளர்ந்தது.<br>2. மஹாயான புத்த மதம் புத்தரை மனித வடிவில் சித்தரிப்பதை அனுமதித்தது.<br>3. இந்தோ–கிரேக்க கூறுகள் ஒன்றிணைந்தது காந்தார கலை என்றழைக்கப்பட்டது<br>**இலக்கியங்கள்**<br>1. பௌத்த ஆசான் நாகார்ஜுனர், அஸ்வகோசர் பாஸவர், வசுமித்திரர் போன்றோரின் புரவலராக கனிஷ்கர் திகழ்ந்தார்.<br>2. அஸ்வகோசர் புத்த சரிதத்தின் ஆசிரியர்<br>3. பாசன் நாடகாசிரியர்<br>4. மனுஸ்மிருதி காமசூத்திரம் அர்த்த சாஸ்திரம் ஆகிய நூல்கள் இறுதி வடிவம் பெற்றன. **(ஏதேனும் ஐந்து)** | 5 |

| | | |
|---|---|---|
| 43<br>(அ) | குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்<br>1. நிர்வாகம்<br>2. கட்டிடக் கலை<br>3. சிற்பக் கலை<br>4. ஓவியங்கள்<br>5. இலக்கியங்கள்<br>6. அறிவியல் வளர்ச்சி<br>7. மருத்துவ வளர்ச்சி **(ஏதேனும் ஐந்து விளக்கத்துடன்)** | 5 |
| | **(அல்லது)** | |
| 43<br>(ஆ) | மாமல்லபுரக் கடற்கரைக் கோவில்களின் கட்டிடக் கலை மேன்மைகள்<br>1. ராஜசிம்மன், மாமல்லபுரம் கடற்கரை கோயிலைக் கட்டினார்<br>2. மூன்று கருவறைகளை கொண்டது.<br>3. தென்னிந்தியாவில் கட்டுமான கோவில்களில் முதன்மையானது.<br>4. பாறையில் செதுக்கப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்டது.<br>5. ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள்<br>6. பல்லவர்களின் அடையாளமாக கடற்கரை கோவில் காணப்படுகிறது.<br>**(ஏதேனும் ஐந்து)** | 5 |
| 44<br>(அ) | சோழர் கால கட்டுமானக் கலையின் சிறப்புகள்<br>1. தஞ்சாவூர் பெருவுடையார் கோவில்<br>2. கங்கை கொண்ட சோழபுரம் கோயில்<br>3. தாராசுரம் கோயில்<br>**(விளக்கத்துடன்)** | 5 |
| | **(அல்லது)** | |
| 44<br>(ஆ) | விஜயநகர ஆட்சியாளர்களின் ஆட்சி முறை<br>1. உயர்மட்ட அதிகாரிகள்<br>2. நிர்வாகப் பிரிவு<br>3. நாயக்க முறை<br>**(விளக்கத்துடன்)** | 5 |
| 45<br>(அ) | தென் தமிழகத்தில் பாளையக்காரர் அமைப்பு முறை<br>1. விஜய நகர பேரரசின் வீழ்ச்சிக்கு பின் அரச பிரதிநிதியாக நாகம நாயக்கர். அவர் மகன் விஸ்வநாத நாயக்கர் மதுரை, திருநெல்வேலி சுதந்திர ஆட்சியாளர்களாக மாற்றினர்.<br>2. தளவாய் அரியநாத முதலியாரின் கீழ் 72 பாளையங்களாக மாற்றப்பட்டன.<br>3. விஸ்வநாத நாயக்கர் மதுரை சுற்றி ஒரு கோட்டையை எழுப்பினார். அதில் 72 அரண்கள் இருந்தன.<br>4. பாளையக்கார அரசருக்கு ஆண்டுதோறும் வரி (கப்பம்) கட்ட படைவீரர்கள், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பதற்கு கடமைப்பட்டவர்.<br>5. இப்பணிகளை செய்வதற்கு சில கிராமங்கள் வழங்கப்பட்டிருந்தன.<br>6. குடிமையியல், குற்றவியல் பிரச்சினைகளை தீர்க்கவும் நீதி வழங்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு.<br>7. மேற்கு மற்றும் கிழக்கு பாளையங்கள் என பிரிக்கலாம்.<br>8. கிழக்கு பகுதியில் உள்ள கரிசல் நிலப் பரப்புகளில் தெலுங்கு பேசுவோர் குடியேறியிருந்தார்கள். **(ஏதேனும் ஐந்து)** | 5 |

| | | |
|---|---|---|
| | **(அல்லது)** | |
| **45 (ஆ)** | **இந்தியாவில் போர்த்துகீசியரின் வருகையினால் ஏற்பட்ட தாக்கம்**<br>1. இந்திய அரசியல் வரலாற்றில் முதல் முறையாக ஐரோப்பியர் இந்திய அரசர்களை வென்று அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றினர்.<br>2. போர்த்துகீசியரால் அரபியரின் வணிக முன்னுரிமையைக் கட்டுப்படுத்த முடிந்தது.<br>3. தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் இடையிலான திருமணங்களைப் போர்த்துகீசியர் ஊக்குவித்ததன் விளைவாக ஒரு புதிய யூரேசிய இனக்குழு உருவானது.<br>4. சென்னை சாந்தோம் போர்த்துகீசியரின் வருகைக்கான முக்கியச் சான்றாக உள்ளது.<br>5. கார்டஸ் என்ற பெயரில் போர்த்துகீசியர் வழங்கும் பாதுகாப்பை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.<br>6. வெடி மருந்து, பீரங்கி படை பயன்படுத்தினர். **(ஏதேனும் ஐந்து)** | 5 |
| **46 (அ)** | **வாரிசு உரிமை இழப்புக் கொள்கை**<br>1. இந்து சம்பிரதாயங்களின்படி வாரிசு இல்லாத மன்னர் ஒரு ஆண் மகனை தத்து எடுக்க முடியும்.<br>2. அவ்வாறு தத்து எடுக்கப்பட்ட மகனுக்கு சொத்தில் முழு உரிமை உண்டு.<br>3. வாரிசு இல்லாத அரசை கம்பெனி இணைத்துக் கொள்ளும்<br>4. வாரிசு இழப்புக் கொள்கையின் மூலம் முதலில் வீழ்ந்த அரசு சதாரா ஆகும்.<br>5. இது **1857** ஆம் ஆண்டு புரட்சி ஏற்பட முக்கிய காரணமாக அமைந்தது.<br>6. **1857** ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின் கம்பெனி ஆட்சி முடிவுற்றது இங்கிலாந்தின் நேரடி ஆட்சி ஏற்பட்டது. **(ஏதேனும் ஐந்து)** | 5 |
| | **(அல்லது)** | |
| **46 (ஆ)** | **கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் பின்வரும் ஐரோப்பிய வணிகத் தளங்களை குறிக்கவும்.**<br>1. சென்னை, **2.**கல்கத்தா, **3.**மும்பை, **4.**கோவா, **5.**கள்ளிக்கோட்டை<br> | 5 |

| | | |
|---|---|---|
| 47 (அ) | **<u>தென்னிந்திய கிளர்ச்சி (1801)</u> :**<br>1. ஆற்காடு நவாப் 1772 உடன்படிக்கை மூலம் வரி வசூல் உரிமையை கம்பெனிக்கு அளித்தார்.<br>2. ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சி<br>3. தென்னிந்தியாவில் மருது சகோதரர்கள் தலைமை தாங்கினர்.<br>4. இவர்கள் 1801 அக்டோபர் 24இல் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டனர்.<br>5. ஊமைத்துரை, செவத்தையா பாஞ்சலாங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டனர்.<br>6. 73 கிளர்ச்சியாளர்கள் மலேயா, பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டனர்.<br>7. அக்னியூ தலைமையில் ஒரு படைப்பிரிவு தென்னிந்திய கிளர்ச்சிகளுக்கு எதிரான நடவடிக்கையை எடுக்கத் தொடங்கியது.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| | **(அல்லது)** | |
| 47 (ஆ) | **<u>மராத்தியர் காலத்தில் நடைபெற்ற ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் வரைக.</u> :**<br>1. **1627–** சிவாஜி பிறப்பு<br>2. **1646** –சிவாஜி தோர்னா கோட்டையை கைப்பற்றுதல்.<br>3. **1647** – தாதாஜி கொண்ட தேவ் இறப்பு<br>4. **1649** –ஷாஜி விடுதலை.<br>5. **1659** – அப்சல்கானுடன் போர்<br>6. **1660** – செயிஷ்டகானுடன் போர்<br>7. **1664** – சூரத் நகரை கைப்பற்றுதல்.<br>8. **1665** –புரந்தர் உடன்படிக்கை<br>9. **1666** – சிவாஜி ஆக்ரா பயணம்<br>10. **1670–** சிவாஜி மீண்டும் சூரத் மீது தாக்குதல்.<br>11. **1674 –** சிவாஜி சத்ரபதியாக முடிசூட்டல்.<br>12. **1676** – சிவாஜி தக்காணம் மீது படையெடுத்தல்.<br>13. **1680 –** சிவாஜி இறப்பு<br>14. **1760–** உத்கிர் போர்<br>15. **1761–** மூன்றாம் பானிபட் போர்<br>16. **1775–** முதல் ஆங்கிலேய மராத்தியப்போர் துவக்கம்<br>17. **1803–** இரண்டாம் ஆங்கிலேய மராத்தியப்போர் துவக்கம்<br>18. **1817–** மூன்றாம் ஆங்கிலேய மராத்தியப்போர் துவக்கம்<br>19. **1832–** இரண்டாம் சரபோஜி இறப்பு<br>**(ஏதேனும் ஐந்து நிகழ்வுகள்)** | 5 |